செய்தி வெளியீடு எண். 153 நாள். 15.03.2017

**திருவள்ளூர் மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில், சத்துணவு மையங்களில் சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் அதற்குரிய இரசீது பெறும் தேதி 24.03.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்ட மையங்களில் ஏற்பட்டுள்ள சத்துணவு அமைப்பாளர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புதல் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

திருவள்ளூர் மாவட்ட சத்துணவு திட்டத்தில் சத்துணவு அமைப்பாளர் காலிப்பணியிடத்திற்கு நேரடி நியமனத்திற்கு சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / நகராட்சிகளில் 28.02.2017 வரையில் விண்ணப்பம் செய்தவர்கள் அதற்குரிய ஒப்புகை இரசீதினை (Acknowledgement) 13.03.2017 வரையில் பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஒப்புகை இரசீது பெற்றுச்செல்ல போதிய கால அவகாசம் இல்லை என பொது மக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது. மேலும் சத்துணவு அமைப்பாளர் காலிப்பணியிடங்களை நிரப்பிட நடைபெற உள்ள நேர்முகத் தேர்வில் கலந்த கொள்ள ஒப்புகை இரசீது அவசியமாகும்.

எனவே, தற்பொழுது இக்காலக்கெடுவினை நீட்டித்து விண்ணப்பம் செய்தவர்கள் அதற்குரிய ஒப்புகை இரசீதினை (Acknowledgement) 24.03.2017 வரையில் விடுமுறை நாட்கள் தவிர அலுவலக வேலை நேரத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 வரை விண்ணப்பம் செய்த அந்தந்த ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~